# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | சைவநெறி – I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................


### பகுதி - I

➢ **எல்லா வினாக்களுக்கும் விடை அளிக்க.**

**01. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. “பிரணவப் பொருளாம் பெருந்தகை.......” என்று “வெற்றிவேட்கை” எனும் நூலில் போற்றப்படுபவர்,
   1. சிவபெருமான் 3. முருகப்பெருமான்
   2. விநாயகப்பெருமான் 4. உமாதேவியார்

02. “அட்சரஅப்பியாசஆரம்பம்” என்று அழைக்கப்படும் வாழ்வியல் சடங்கு,
   1. காதுகுத்தல் 2. சோறூட்டல்
   3. ஏடு தொடக்குதல் 4. பெயர் சூட்டுதல்

03. தேவாரப்பாடல்கள் கண்டெடுக்கப்பட்டதிருத்தலம்,
   1. திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் 2. திருவீரட்டானம்
   3. திருக்கோணேச்சரம் 4. சிதம்பரம்

04. பஞ்சபுராணம் ஓதமுன்பும் ஓதியபின்பும் சொல்லவேண்டியது,
   1. திருச்சிற்றம்பலம் 2. சிவசிவ
   2. நமசிவாய 4. இறைவாபோற்றி

05. “சீருந்திருவும் பொலியச் .....” எனத் தொடங்கும் பாடல்,
   1. திருவாசகம் 2. திருவிசைப்பா
   2. திருப்பல்லாண்டு 4. திருப்புராணம்

(5x2 =10 புள்ளிகள்)

**02. தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 1. | முழுமுதற் கடவுள் சிவன் | இரண்டாம் பாடல் |
| 2. | சிவசின்னங்கள் | சைவசமயத்தவர் |
| 3. | ஆறுமுகநாவலர் | கைவிசேடம் |
| 4. | கிராமியத் தெய்வம் | விபூதி, உருத்திராக்கம் |
| 5. | சித்திரைப்புத்தாண்டு | ஐயனார் |

(5x2 =10 புள்ளிகள்)



kalvi.lk

**03. சரியாயின் (✓) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடைப்புக் குறியினுள் அடையாளமிடுக.**

1. ஆலயம் சென்றுவழிபடுவதால் மனம் ஒருநிலைப்படும். ( )
2. சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியில் இளையான்குடிமாறநாயனார் ஈடுபட்டார். ( )
3. திருமுறைகள் பதினெட்டாகும். ( )
4. இலங்கையில் சீதையம்மன் ஆலயம் திருகோணமலையில் உள்ளது. ( )
5. ஞானப்பிரகாசமுனிவர் பசுவதைக்கு அஞ்சி தமிழகம் சென்றார். ( )

(5x2 =10 புள்ளிகள்)

**04. பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.**

(நிறைகுடம் /சண்டேஸ்வரர் / கிழக்கு / திருமுறைகள் / மாவிட்டபுரம் )

1. ஆலய வழிபாட்டில் இறுதியாக வழிபடும் தெய்வம் ............................................ ஆவார்.
2. திருஞானசம்பந்தரது தேவாரப் பாடல்கள் முதல் மூன்று ....................... ஆகத் தொகுக்கப்பட்டுள்ளன.
3. விசேடதினங்களின் போது சைவர்கள் ............................................ வைப்பர்.
4. குதிரை முகம் நீங்கியதால் ............................................ என்ற பெயர் ஏற்பட்டது.
5. திருக்கோணேச்சரம் ............................................ மாகாணத்தில் அமைந்துள்ளது.

(5x2 =10 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

➢ **முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**01.** 1) பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினைப் பிழையற வரிக்கிரமமாக எழுதுக.

2) அதனைப் பாடியவர், பண் என்பவற்றைக் குறிப்பிடுக.

அ) "இடரினும் தளரினும் ........... "

ஆ) "ஓசையொலியெலாம் .........."

இ) "பித்தாப்பிறைசூடி ............... "

ஈ) "சீருந் திருவும் பொலிய........."

( 6×2 =12 புள்ளிகள்)

**02. 'விழுமியங்கள் வாழ்க்கைக்கு அவசியமானவை'**

1. விழுமியங்கள் என்றால் என்ன?
2. விழுமியப் பண்புகள் இரண்டினை குறிப்பிடுக.
3. விழுமியப் பண்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நாம் பெறும் பயன்கள் எவை?

(4+4+4 ) =12 புள்ளிகள்

**03. 'தெய்வத்தன்மை பொருந்தியவை திருமுறைகளாகும்'**

1. திருமுறைகளைத் தொகுத்தவர் பெயர் தருக.
2. திருமுறைப்பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினை குறிப்பிடுக.
3. சுந்தரமூர்த்தி நாயனார் ஆற்றிய அற்புதங்கள் நான்கு தருக.

(4+ 4 +4 ) =12 புள்ளிகள்)

**04. 'இறைவனை மெய்யன்போடு வழிபடத்தூண்டுபவை விரதங்கள் '**

1. விரதம் என்றால் என்ன?
2. முருகனுக்குரிய விரதங்கள் இரண்டினை தருக.
3. விரதங்கள் அனுட்டிக்கும் காலத்தில் பின்பற்றவேண்டிய நியதிகளைக் குறிப்பிடுக.

(4+4+4 ) =12 புள்ளிகள்

**05. 'மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினான்கு ஆகும் '**

1. பசுவிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் இரண்டு தருக.
2. பதி என்பதன் பொருள் யாது?
3. பதியின் இயல்புகள் எவை எனக் குறிப்பிடுக.

(4+ 4 +4 ) =12 புள்ளிகள்

**06. 'உலகின் தொன்மையான வழிபாடு கிராமிய வழிபாடு ஆகும் '**

1. கிராமிய வழிபாடு வேறு எவ்வாறு அழைக்கப்படும்?
2. கிராமியத் தெய்வங்கள் இரண்டு தருக.
3. நீர் அறிந்த கிராமிய வழிபாட்டு முறைபற்றி சுருக்கமாகக் குறிப்பிடுக.

(4+ 4 +4 ) =12 புள்ளிகள்

**07. பின்வரும் தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவுசெய்து சிறுகுறிப்பு எழுதுக.**

1. வாழ்வியற்சடங்குகள்
2. பண்டிகைகள்
3. ஞானப்பிரகாசமுனிவர்
4. திருக்கோணேச்சரம்
5. பஞ்சபுராணம்.

( 6×2 =12 புள்ளிகள்)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457